# யாழ்நகரில் நேற்று அமைதி, பீதி, பதற்ற நிலை; பூரண கடையடைப்பு; எங்கும் குண்டுவெடிப்பு

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு2 14-12-85 சனிக்கிழமை(கார்த்திகை 29 ரபியுஆகிர் 1) முழக்கம் 309

(அலுவலக நிருபர் ம. றூபன்)

யாழ்நகரில் நேற்று அமைதி, பதற்றம், பீதி ஆகியன ஏககாலத்தில் மக்களிடையே பரவியிருந்த அதே வேளையில் கடையடைப்பும் இடம் பெற்றது. அத்தியாவசிய சேவைகள். ஜி.சி.ஈ. பரீட்சை ஆகியன பாதிக்கப்படாத வகையில் இவை இடம்பெற்றன. காலையில் அரச ஊழியரும், தனியார் ஊழியரும் நகருக்குத் தமது கடமைக்கு வந்தனர். 'புளொட்' இயக்கத்தினரின் வேண்டுதலையடுத்து கடைகள் மூடப்பட்டன. அதிகாலை முதல் இரவு வரை நகரின் பல பாகங்களிலும் குண்டுச் சத்தங்கள் கேட்டன. "சிலர் வருகிறார்கள்" என்ற வதந்தியும் பரவலாகப் பரவியது. நேற்று யாழ் நகரின் சில முக்கிய இடங்களின் நிலை வருமாறு: கச்சேரி: இங்கு காலையில் கருமங்கள் வழமைபோல நடைபெற்றுக் கொண்டிருந்தன. குண்டு வெடிப்புச் சத்தங்களை தொடர்ந்து போக்குவரத்து சேவைகள் நிற்பதாக தகவல் வந்ததால் ஊழியர் தொகையும் குறைந்தது. ஆஸ்பத்திரி; அவசர நோயாளிகள் காணப்பட்டனர். வெளிநோயாளர் பிரிவில் மிக குறைவாகவே காணப்பட்டனர் போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப்படுகிறது என்பதால் பார்வை

... 6ஆம் பக்கம் பார்க்க

# திருமலையில் நேற்றும் இளைஞர் கைது; இளம் பெண் கற்பழிப்பு

## இருவர் சுடப்பட்டு கடையுடன் சேர்த்து எரிககப்பட்டனர்; ஆலங்கேணியில் பதற்றம்

(திருமலை)

**திருமலையில் அன்புவழிபுரம், ஆலங்கேணி ஆகிய பகுதிகளில் ஆயுதபபடையினர் நேற்று திடீர் வேட்டைகளை நடத்திப் பலரைக் கைது செய்துள்ளனர். இளம் பெண்ணொருவர் கற்பழிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.**

அன்புவழிபுரத்தில் சுமார் முப்பத்திரண்டு இளைஞர்கள் கைதானதாகத் தெரியவந்துள்ளது. இவர்களில் பலரும் தமது வீடுகளில் பெற்றோருடன் தங்கியிருந்த போதே கைதான தாக பிரஜைகள் குழுவினருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஆலங்கேணியிலும் சுமார் பதினைந்து பேர் கைதானதாகத் தெரியவந்துள்ளது. இங்கு சோமசுந்தரம், தர்மலிங்கம் ஆகிய இருவர் சுடப்பட்ட பின்னர் அவர்கள் வீட்டுக்கு அண்மையிலுள்ளகடையொன்றுக்குள் போட்டு அவர்களை எரித்தனராம். இதனால் மூன்று கடைகள் முற்றாக எரிந்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

தர்மலிங்கத்தின் மைத்துனி முறையான இளம் பெண் சோதனையிட வந்தவர்களால் கற்பழிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர் இன்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னால் ஆஜராகுவார் எனத் தெரிய வந்துள்ளது.

ஆலங்கேணியில் கைதான கேதீஸ்வரி என்ற இளம்பெண் நேற்று விடுதலையானார். இவருடன் கைதான சிதம்பரம் சின்னாண்டி இது வரை விடுதலை செய்யப்படவில்லை.

### தமிழ் அமைச்சர் விரைவில் ராஜினாமா

தமிழ் அமைச்சர் ஒருவர் அடுத்த நான்கு மாதங்களில் தமது பதவியிலிருந்து விலகலாம் என்று அவருடன் மிக நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. சிங்கள தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் தமிழர் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணப்படாவிட்டால் தமது ராஜினாமா நிச்சயமென்று அமைச்சர் திட்டவட்டமாகக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### அரசாங்கம் மறுக்கிறது

வடபகுதியில் இறுதித்தாக்குதலொன்றை நடத்த அரச படைகள் தயாராவதாக சென்னையிலிருந்து ஈ. பி. ஆர். எல். எப். விடுத்த அறிக்கையை அரசாங்கம் முற்றாக மறுத்துள்ளது. இவ்வாறான எந்தத் திட்டமும் அரசிடம் கிடையாது என்று அர

...6ம் பக்கம் பார்க்க

## வடபகுதி ரயில் சேவைகள் மீண்டும் ரத்தானது!

(கொழும்பு)

வடபகுதிக்கான ரயில் சேவை அரசாங்கத்தினால் மீண்டும் ரத்துச் செய்யபபட்டுள்ளது

நேற்று முன்தினம் பயணிகள் இல்லாத இன்ரசிற்றி ரயில் கொழும்பு கோட்டைக்கும் மருதானைக்குமிடையே குண்டு வெடித்ததையடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டது.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட யாழ் தேவி, பிற்பகல் மருதானை சென்றடைந்தது.

கொழும்பிலிருந்து தினசரி காலை புறப்படும் வடபகுதிக்கான ரயில் அனுரதபுரம் வரை மட்டுமே சேவையிலீடுபடும் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

## வவுனியா அம்புலன்ஸ் வண்டி மர்மமாக எரிந்து கருகியது

(வவுனியா)

வவுனியா சுகாதாரப்பகுதிக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டியொன்று நேற்று மிகவும் மர்மத்துக்கிடமான வகையில் தீப்பற்றி முற்றாக எரிந்துள்ளது.

வவுனியாவுக்கும் மதவாச்சிக்குமிடையே அம்புலன்ஸ் ஓடிக் கொண்டிருக்கையில் அணைக்க முடியாத நிலையில் தீப்பற்றி எரிந்ததாக புகார் செய்யப்பட்டுள்ளது.

வாகனத்திலிருந்த சாரதி காயமெதுவுமின்றித் தப்பியுள்ளார். இச்சம்பவம் பற்றி இரகசிய பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## வல்லை வீதிப் பற்றைகளுக்குள் இராணுவம் ஒழிந்திருந்தது!

தொண்டமானாறு முகாமிலுள்ள ஆயுதப்படையினரும் நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதியில் திடீர் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் யாழ். பருத்தித்துறை வீதியில் சில மணி நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது.

வல்லை வீதியின் இரு மருங்கின் பற்றைகளுக்கு இடையிலும் வீதியின் அருகாமைகளிலும் இவர்கள் படுத்திருந்து கண்காணிப்புச் செலுத்தினர். இவ்வாறு இவர்கள் மறைந்திருப்பதை அறியாது வல்லை வீதியால் வந்த பல வாகனங்கள் கடுமையான சோதனைக்குள்ளாகின.

நண்பகல் வரை ஆயுதப் படையினர் வடமராட்சிப் பகுதியில் நடமாடியதால் இங்குள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன.

## கட்டைபறிச்சான் சம்பூர் கொலைகள்பற்றி கண்காணிப்புக் குழு முன் பலர் சாட்சியம்

(திருமலை)

கட்டைபறிச்சான், சம்பூர் பகுதிகளில் கடந்த மாதமும், இம்மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் இடம்பெற்ற கொலை, தீவைப்பு, வன்செயல்கள் பற்றி பத்துக்கும் மேற்பட்டோர் நேற்று இங்கு விஜயம் செய்த கண்காணிப்புக் குழுமுன் ஆஜராகிச் சாட்சியமளித்தனர்.

சம்பூரில் 16 பேர் சுடப்பட்ட சம்பவம், 5 பேர் கடலில் செல்லும்போது சுடப்பட்ட சம்பவம், ஆலங்கேணியில் இடம் பெற்ற கொலைகள், தாக்குதல்கள் பற்றிய விசாரணைகள் நேற்று நடைபெற்றதாக சாட்

... 6ம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்தில் அமைச்சர் இராசதுரை பேச்சு: "தமிழர்கள் 25 வருடங்களாக பந்துபோல அடிக்கப்படுகின்றார்கள்"

(கொழும்பு)

"இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் கடந்த 25 வருடங்களாக பந்து போல அடிக்கப்படுகின்றார்கள். தமிழர்களைப் போல சிங்களவர் இந்த நாட்டின் சிறுபான்மையினமாக இருந்திருந்தால் இவ்வளவு பொறுமையாக இருந்திருப்பார்களா என்பது சந்தேகமே என்று நேற்று பாராளுமன்றத்தில் பேசும் போது அமைச்சர் செ. இராசதுரை தெரிவித்தார்.

தமது அமைச்சின் மீதான ஒதுக்கீடு தொடர்பான வரவு செலவுத் திட்ட விவாதத்துக்கு அமைச்சர் பதிலளித்துப்பேசும் போது, "1956ம் ஆண்டு தந்தை செல்வா தமிழர் பிரச்சினை தீர மூன்று வழிகள் இருப்பதாகச் சொன்னார். அடிமை

... 6ம் பக்கம் பார்க்க

## இரு வயோதிபர் சடலமும் உறவினரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் நேற்று முன்தினம் ராணுவத்தினர் மேற்கொண்ட சூட்டுச் சம்பவத்தில் மரணமான மானிப்பாய் துரைச்சாமி, அரியாலை கிருஷ்ணபிள்ளை ஆகிய இரு வயோதிபர்களது சடலங்களும் நேற்றுப்பிற்பகல் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மரண விசாரணை அதிகாரிகளான திருவாளர்கள் ஏ. அன்ரனி, கே. கேசவன் ஆகியோர் முறையே துரைச்சாமி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரது

.. 6ஆம் பக்கம் பார்க்க

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு


வலம்புரி சங்கு

இல்லங்களில் இலட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூசை ஆராதனைகளுக்கும் பாவிப்பதற்கு உகந்த அரிய பொக்கிஷம். தாஸ், மாணவர் அறப்பணி மன்றம், 59, மீனாட்சிஅம்மன்வீதி, பண்ணை.

### மணமகள் தேவை

யாழ். இந்து உயர்கோபியர் குல, ீமறகு ஜேர்மனியில வேலைசெய்த, 1-1-59ல்பிறந்த, செவ்வாய் தோஷமற்ற, அழகிய ஆரோக்கியமான இளைஞருக்கு பத்தொன்பது வயதிற்குட்பட்ட, பிறப்புவிதிஎண்கள் 4-5 5-4 ஆகியவை கொண்ட, அழகான மெல்லிய தோற்றமுடைய மணமகள் தேவை. முழு விபரங்களுடனும், அண்மையில் எடுத்த புகைப்படத்துடனும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி - மலரி சேவிசஸ், 37(351) மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம்.

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க



(நல்லூர்)

யாழ். பரியோவான் கல்லூரியிலே உயர்தர மணவர்களுக்கிடையிலான தமிழ்ப் பேச்சுப் போட்டியில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு விஞ்ஞானப் பிரிவு 2ம் வருட மாணவனான செல்வன் செல்வநாயகம் முகுந்தன் தங்கப் பதக்கம் பெற்றார்.

நாளை

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

வல்வை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் நடாத்தப்பட்ட இலவச வார இறுதி சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி (தமிழ்/ஆங்கிலம்) பெற்றவர்களுக்கான பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை பதினைந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வல்வை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. ச. சேனாதிராஜா தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக வட பிரதேச மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. ம. கணேசசுந்தரம் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக உதவி அரச அதிபர்களான திரு. இ. ஐயாத்துரை, திரு வை. வேலும்மயிலும் வட்டாரக் கல்வியதிகாரிகளான திரு. ப. சச்சிதானந்தம், திரு. வ. க. ஈசுரபாதம் வட பிரதேச மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் திரு. இ. சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். விவாத அரங்கும் இடம்பெறும்.

## வைத்தியசாலை அபிவிருத்தி, கூடி ஆராய்வு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை ஊறணி அரசாங்க ஆஸ்பத்திரியில் டாக்டர் செல்வி பத்மலோஜனி தலைமையில் அபிவிருத்திச்சபை கூடி அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்ந்தது.

மருந்துகள், உபகரணங்கள் தட்டுப்பாடு குறித்து வைத்திய அத்தியட்சகரைச் சந்தித்து விளக்குவதெனத் தீர்மானமாகியது.

## பிறந்தநாள் வாழ்த்து

⌘ புலோப்பளை கிழக்கு அந்தோனியார் கோவிலடி செலஸ்தீன் - மேரிஸ் நீற்ரு (திரவியம்) தம்பதியின் புதல்வன் கனிஸ்ரன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

⌘ கல்வயல் அருணாசலம் - இராசலட்சுமி தம்பதியின் மகன் மயூரன் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

⌘ இராமநாதபுரம் தம்பிராசா - சரோஜினி தம்பதியின் மகள் தர்ஜினி ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

⌘ யாழ். நாச்சிமார் கோவிலடி சந்திரசேகரம் - கமலா தம்பதியின் மகள் பிரதீபா ஆறுவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

⌘ அல்வாய் தெற்கு நவரத்தினராஜா - சத்தியவதி தம்பதியின் மகன் திலீபன் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

⌘ மிருசுவில் மகளிர் குடியேற்றத் திட்டம் யோகநாதன் சோதீஸ்வரி தம்பதியின் மகள் கௌசி தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

⌘ நவாலி பத்மநாதன் - ரஞ்சனா தம்பதியின் மகன் சதீஸ் ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

⌘ வல்வெட்டித்துறை பாக்கியநாதன் - கலாராணி தம்பதியின் மகள் அருண்ஜா முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.


விழாக் காலச் சலுகை!

15 - 12 - 85—30 - 1 - 86 வரை

உங்கள் முதலீடு 3 வருடங்களில்



இரண்டு மடங்காகிறது

விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்!

தனித்துவமான 36% வட்டி

முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்

நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!

யாழ்-தமிழர் நிதியம்

140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(மனோகரா தியேட்டருக்கு அருகாமையில்)

தொலைபேசி: 22437

# சமூக அபிவிருத்திகுழுக்களை மீள அமைக்க நடவடிக்கை

(நல்லூர்)

யூனிசெப் திட்ட அமுலாக்கல், தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றத்தினுல் சிபார்சு செய்து வழங்கப்படும் வீடு அமைப்பு, சிறு கடன்கள் ஆகிய இரு விடயங்களையும் அமுல் செய்வதற்கு அவ்வப் பகுதியிலுள்ள ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சமூக அபிவிருத்திக்குழுக்களை ஜனவரி மாதம் முதல் திகதி தொடக்கம் மீள நியமிக்க யாழ். மாநகராட்சி மன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது

சமூக அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கும் விடயம் குறித்து யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குள் இயங்கும் சன சமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர்களுக்கு யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தற்பொழுது சன சமூக நிலையங்களின் உத்தியோகத்தர்கள் அந்தந்த சன சமூக நிலையங்களால உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்படுவதால் அவற்றை மையமாகக் கொண்ட பகுதி சமூக அபிவிருத்திக் குழுக்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதென்றும், 31-12.85க்கு முன்னர் சன சமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டி கூடுமான வரை புதிய உறுப்பினர்களையும், துடிப்புடன் செயற்படக் கூடியவர்களையும், உறுப்பினர்களாகச் சேர்த்து உத்தியோகத்தர் தெரிவு நடாத்தி அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

# சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் இன்று முதல் நிதி வாரம்

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், நல்லூர் யாழ் படை அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள ஆதரவாளர்களிடமிருந்து அன்பளிப்புப் பணம் பெறும் பொருட்டு இம் மாதம் 14ம் திகதி முதல் 28ம் திகதி வரையிலுள்ள இருவார காலப்பகுதியை நிதி வாரமாக செயற்குழு பிரகடனப்படுத்தியுள்ளது.

இந் நிதி வாரத்தின் போது சேகரிக்கப்படும் பணம் அப்பகுதியில் ஒரு நிரந்தர காரியாலயத்தை அமைக்கவும், இயற்கை இன்னல்களின்போது பாதிப்புறும் மக்களின் முதலுதவித் தேவைகளுக்கும் செலவிடப்படும்.

இதற்காகச் செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு தலைவராக செ. செல்வறஞ்சன், உபதலைவராக ந. நகுலரூஜ், செயலாளராக எம். ஞானசம்பந்தன், உப செயலாளராக செல்வி சாந்தினியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

நல்லூர் யாழ். படை அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட அரியாலை, நல்லூர், கொக்குவில், தாவடி, திருநெல்வேலி, கோண்டாவில், இணுவில் ஆகிய பிரிவுகளிலுள்ள சகல அங்கத்தவர்களும் மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை எட்டு மணிக்கு சீருடையுடன் தலைமைக் காரியாலயத்திற்கு சமுகமளிக்கும்படி படை அத்தியட்சகர் செ. செல்வறஞ்சன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 1986-ம் வருடத்திற்கான

# ஆங்கில போதனைக்கான பயிற்சி வகுப்புகள் நிகழவுள்ளன

(வயாவிளான்)

1985ம் ஆண்டில் இருந்து நடைமுறைபபடுததப்பட்ட புதிய திருத்திய பாடவிதானக் கற்பித்தல் வரிசையில் 1986ம் ஆண்டிற்கு ஆங்கிலம் கற்பித்தலுக்கான பயிற்சி வகுப்புகள் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ளன.

கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளின்முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதற்காகபாடநூல்கள் பற்றியும், அவற்றிறகுத் தொடர்பான முறைகள் பற்றியும், தெளிவான விளக்கத்தையும் திறனையும் ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகவே இப்பயிற்சி வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

கடந்தவருடம் ஆண்டு4-ற்கு கற்பித்த, இவ்வருடம் ஆண்டு 5-க்கு கற்பிக்கவுள்ள ஆங்கில ஆசிரியர்கள் இவ்வகுப்புகளுக்குப் பங்குபற்ற வேண்டுமென பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் ஆங்கிலத்துக்குப் பொறுப்பான கல்விப்பணிப்பாளர் திரு. எம். அமரதுங்க டி சில்வா பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ். மாவட்ட ஆங்கில வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரம் இம்மாதம் 21-ம் திகதியில் இருந்து யாழ். மாவட்டத்தில் இவ்வகுப்புகளை நடத்த ஒழுங்கு செய்துள்ளார்.

# இலவச புத்தக விநியோகம்

(நீர்வேலி)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் அடுத்த ஆண்டிற்கான இலவசப் பாடப்புத்தக விநியோகம் இம்மாதம் 17ம் திகதி கீழ்வகுப்பு மாணவர்கட்கும், 18ம், 19ம, 20ம் திகதிகளில் முறையே 6ம், 7ம், 8ம் வகுப்புகளிற்கும் மேற்படி கல்லூரியில் வழங்கப்படும் என கல்லூரி நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

மேலும் பாடசாலை ஆரம்பமாகு முன் புத்தகம் வழங்குவதால் குறைந்து காணப்படும் கல்வித் தராதரத்தை பெற்றோரின் உதவியுடன் ஓரளவு தராதரம் ஆக்கிக்கொள்ள முடியும் என குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

Commerce
DAY CLASS
ஆரம்பம்: 16,12.85 திங்கள் காலை 8 மணி
(மிகவும் ஒழுங்கான வகுப்புக்கள், திறமையான ஆசிரியர்களின் சேவைக்கு)
New Master Institute
B. M. C. Lane, JAFFNA.

## கருத்தரங்கில் மாஜி. யாழ். இந்து அதிபர் உரை

# உரிமை மறுக்கப்படும் இனம் போராடி நீதியை நிலைநாட்டுவது தவிர்க்க முடியாதது

(காரைநகர்)

"அரசுகளின் அதிகார இனவெறியும், வல்லரசுகளின் போட்டியுமே மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் ஐ. நா. வின் இயலாமைக்கு ஒரு காரணமாகும். பல இன மக்கள் வாழும் நாடுகளில் பெரும்பான்மை ஜனநாயகக் கோட்பாடுகளைக் கொண்ட அரசு அமையாவிட்டால் அது மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுக்கும்."

இவ்வாறு ஐ. நா. சர்வதேச மனித உரிமைகள் தினத்தையிட்டு காரைநகரில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய (முன்னுள் யாழ் - இந்துக் கல்லூரி அதிபர்) திரு. ஏ. நடராசா குறிப்பிட்டார்.

காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் டாக்டர் ஆ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. ஏ. நடராசா தொடர்ந்து உரையாற்றுகையில், '1945 இல் முதன் முதலாக மனித உரிமைகள் பற்றிய கருத்து வெளியிடப்பட்டது. உலக சமாதானத்திற்கும் மனித உரிமைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனிதன் மனிதனுக வாழ்வதற்கே மனித உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

மனித மனம் வளர்ச்சியடையாமையே மனித உரிமை மீறலுக்குக் காரணமாகும். ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டால் அது உள்நாட்டு விவகாரம் எனக் கூற முடியாது.

சமய, சமூக, சாதி வேற்றுமை, சமத்துவமின்மை இன வேற்றுமை, ஆண் பெண் வேற்றுமை, மனிதாபிமான மற்ற தன்மை போன்ற பல்வேறு நிலைகளில் மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மக்களின் உள்ளார்ந்த சிந்தனையின் அடிப்படையில் சகல விடயங்களிலும் சமத்துவம் ஏற்படும் போது தான். மனித உரிமைகள் நிலைநாட்டப்பட முடியும்.

மனிதன் தனது சுய நிர்ணய உரிமையைப் பாதுகாப்பதற்காகப் போராடித் தோல்வி கண்டது சரித்திரத்தில் கிடையாது எனவே உரிமைகள் மறுக்கப்படுகின்ற இனம் தனது சுயநிர்ணய உரிமைகளை நிலை நாட்டப் போராடுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது" என்ருர்.

வண. பிதா. அ. ஜெயக்குமார் உரையாற்றுகையில், இறைவனது படைப்பின் சிகரம் மனிதன். சுதந்திரமாக அனைத்தையும் ஆட்கொள்வதற்கென்றே, இறைவன் மனிதனைப் படைத்தான். ஆனுல் சில சந்தர்ப்பங்களில் மனிதன் மனிதனை மனிதனுக மதிக்கத் தவறிவிடுகிருன்.

மனிதன் வேலை செய்யாது சும்மா இருத்தலும் மனித உரிமை மீறலாகும். உரிமைகள்மறுக்கப்படுகின்ற காரணத்தினுலேயே மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

எமது நாட்டில் இன்றுமனித உயிருக்கு உத்தரவாதமில்லை. எமது மக்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் நிலையிலோ உரிமையைக் கேட்கும் நிலையிலோ இல்லை. யாராவது உரிமைகளைப் பெற்றுத் தரட்டும் நாம் அனுபவிப்போம் என்ற நிலையே காணப்படுகிறது.

பிலிப்பைன்ஸ், தாய்வான் போன்ற நாடுகளில் 14-20 வயதுக்குட்பட்ட பெண்கள் கட்டாய விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகிருர்கள். இங்கு பெண்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. மனிதரை மனிதராக மதிக்க வேண்டுமென அனைத்து மக்களுக்கும் நாம் அறிவுரைகூற வேண்டும்.' என்ருர். இலங்கை சர்வோதய சேவா சங்கத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில் திரு. வை. சுந்தரமூர்த்தி யாழ்ற்ரன் கல்லூரி உப அதிபர் திரு. து. சேனுதிராசா, மெய்கண்டான் வித்தியாலய அதிபர் திரு கி. சிவமணி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

## புலோலி வைபவப் பேச்சு:

# கிராமிய மேம்பாட்டுக்கு சனசமூகநிலையங்கள் உதவும்

(புலோலி)

"சனசமூக நிலையங்கள் கிராமிய மேம்பாட்டிற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். கிராமியக் கல்வி, கலை, கலாச்சாரம், விளையாட்டுத்துறை, பொருளாதாரத் துறைகளின் அபிவருத்திக்குச் சன சமூக நிலையங்களின் செயற்பாடுகள் மிக இன்றியமையாதனவாகும். சத வதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் விவசாயிகளுக்கு மிக இன்றியமையாததான "விவசாய சேவை நிலையத்தை"த் திறந்து வைத்துள்ளது விவசாயிகளுக்கு கிடைத்த சிறப்பாகும்."

இவ்வாறு, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு. கோ. அருணகிரி மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரின். கதிரவேற்பிள்ளை விவசாய சேவை நிலையத் திறப்பு விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவரும், நிலையத்தலைவருமான திரு. மு. பொ. வீரவாகு (ஜே பி) விவசாய சேவை நிலையத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்துவிற்பனையையும் ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து திரு. அருணகிரி பேசுகையில், இன்றைய நிலையிலே விவசாயிகள் பெரும்பாதிப்புக்குட்பட்டு வருகின்றனா. விவசாயிகளின் குறைபாடுகளை நீக்குவதற்கு வேண்டிய நடவடிகைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிக முக்கியமாகும். இந்நிலையிலே விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதிலும், அவர்களின் குறைபாடுகளை நீக்குவதிலும் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகநிலையம் முன்னணியில் திகழ்வது பாராட்டப்பட வேண்டியதாகும். ஏனைய சனசமூக நிலையங்களும் இது போன்ற முன்னணி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். விவசாயிகளின் நன்மைகருதி திறந்து வைக்கப்பட்டுள்ள இவ் விவசாய சேவை நிலையத்திற்கு எமது பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மூலம் வழங்கக்கூடிய உதவிகள் யாவும் வழங்கப்படும்.

திரு. வீரவாகு, விவசாயப் போதனுசிரியர். திரு. கே. கிருஷ்ணபிள்ளை, பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க உதவி பொதுமுகாமையாளர் திரு. எஸ். செல்வராசா, நாவலர் சனசமூகநிலையத்தலைவர் திரு. எஸ். விஜயரத்தினம், பொதிகை சனசமூகநிலையத் தலைவர் திரு. பா. இரகுநாதன், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. கே சண்முகநாதன், விவசாய உத்தியோகத்தர், திரு. எஸ். கணபதிப்பிள்ளை திரு. கே. கே. தங்கராஜா உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். திரு. எஸ். விக்கினேஸ்வரன் நன்றியுரை கூறினுர்.

## வீடமைப்பு; முகாமையாளர் தகவல்

# தகுதி நிலை உள்ளோர்க்கு 2-ம் 3-ம் கட்டக் கடன்கள்

(சாவகச்சேரி)

"சாவகச்சேரிப் பகுதியில், பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கடனுக்கு மனுச் செய்துள்ள, புதிய வீடமைப்பாளர்களுக்கு இந்த ஆண்டில், இனி மேல் முதலாம் கட்டக் கடன் கொடுக்கப்படமாட்டாது. இரண்டாம், மூன்ரும் கட்டக்கடன் பெறக் கூடிய தகுதி நிலையிலுள்ள வீடமைப்பாளர்களுக்கு மட்டுமே கடன் கொடுக்கப்படும்."

சாவகச்சேரி தொகுதியில் பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கடன் பெற்று வீடமைப்பு வேலையில் ஈடுபட்டுள்ள சகல வீடுகளையும் நேரில் சென்று பார்வையிட்ட யாழ். தேசியவீடமைப்பு அதிகார சபை பிராந்திய முகாமையாளர் திரு. த. பூ. முருகையா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

"1986 ஜனவரி வரை தேசிய வீடமைப்பு அதிகார சபை முதற்கட்ட கடன் கொடுப்பனவை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. இப்பொழுது வீடமைத்து அரை குறையாக உள்ளவர்களுக்கே அவர்களின் இரண்டாம், மூன்ரும் கட்ட கடனையே அடுக்கடுக்காகக் கொடுத்து அவர்கள் தமது புதிய வீடுகளை பூர்த்தி செய்ய உதவி அளிப்பதே வீடமைப்பு அதிகார சபையின் திட்டம். 1986 ஜனவரி முதல் 1986 ஆகஸ்ட் வரையும் தொடர்ந்து புதிய கடன் திட்ட வீடமைப்பாளர்களுக்கு முதலாம் கட்ட கடன் வழங்கப்படும்.

எனவே இரண்டாம், மூன்ரும் கட்ட கடன்களைப் பெறவுள்ள கடன் திட்ட வீடமைப்பாளர்களே நீங்கள் உங்கள் வீடமைப்பு வேலைகளைத் துரிதப் படுத்துங்கள்" என்றும் அவர் விளக்கினுர்.

86 A/L DAY CLASS
3ம் பிரிவு
ஆரம்பம் 16-12-85
திங்கள் காலை 11 மணி
(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)
விபரங்கட்கு:-
NEW MASTER INSTITUTE
BMC LANE. JAFFNA.

ஈழமுரசு

உதய சிந்தனை

*இளம்பியுள்ள தீய இயல்புகளை ஒதுக்கி வைத்துவிடு,*
*-கௌதம புத்தர்*

3, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

14 12-85 சனிக்கிழமை (குரோதன) கார்த்திகை-29

# மனித உரிமைகள் தின ஞாபகார்த்தக் கொலைகள்

அண்மைக் காலங்களில் மிகவும் பாதுகாப்பான பகுதி யென்று மற்றைய மாவட்டத் தமிழர்களால் கணக்கிடப்பட்ட யாழ்ப்பாணம், நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவத்தினுல் கலக்கமடைந்துள்ளது.

திருமலை, வவுனியாவில் இடம் பெற்ற வன்செயல்களால் அகதிகளாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளென்ற நாமகரணம் சூட்டப்பட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

அரசாங்க அகதி முகாம்களிலும், தொண்டர் ஸ்தாபனங்கள் நடத்தும் முகாம்களிலும், நண்பர்கள் உறவினர்களின் இல்லங்களிலும் இவர்கள் தங்கியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக, ராணுவம் யாழ்ப்பாணத்தில் ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாமென்ற செய்தி பரவலாக இங்கு அடிபட்டு வந்தது.

இதற்கு ''நாடி பிடித்துப்பார்ப்பது'' போல, அண்மையில் சில நாட்களாக ராணுவத்தினர் கோட்டைக்கு வெளியே வருவதும், உள்ளே போவதுமாக இருந்தனர்.

நாவற்குழி முகாமுக்கு அருகாமையில் மேற்கொள்ளப்பட்ட ஊசாடடமும், திடீர் ரோந்துகளும், எந்த வேளையிலும் யாழ். நகரில் ராணுவ முற்றுகை இடம் பெறலாமென்ற அச்சத்தை அனைவருக்கும் ஏற்படுத்தியிருந்தது.

தற்போது ஜீ, சி. ஈ. சாதாரண தரத்துக்கான பரீட்சை நடைபெறுவதால், எந்தக்காரணம் கொண்டும் ராணுவ ரோந்து சுற்றிவளைப்பு, முற்றுகை போன்ற வேண்டத்தகாத நடவடிக்கைகளை இடம் பெறுமல் செய்வதில் குடாநாட்டின் சிவில் நிர்வாக அதிகாரிகள் தம்மாலான முழு முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தனர்.

ஆனுல், எல்லாக் கட்டுப்பாடுகளையும் மீறி, நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஆயுதப்படையினர் தமது கைவரிசையை நகரில் நடமாடிய அப்பாவிகள் மீது காட்டியுள்ளனர்

ராணுவத்தினரின் வெறியாட்டத்தினுல் மரணமான இருவரையும் சாதாரண பொதுமக்கள் என்று சொல்வதிலும் பார்க்க, வயோதிபர்கள் என்று சொல்வதே பொருத்தமாகும்.

ஒருவர் எழுபத்தொன்பது வயதான ஓய்வூதியக்காரர். மற்றவர் நகரில் நாட்டாண்மையாகத் தொழில் புரிபவர். இவருக்கு ஐம்பத்தெட்டு வயது அரசாங்க சேவைக்கான வயது வரம்பின்படி பார்த்தால் இவரும் கூட ஒரு ஓய்வூதியகாரர் தான்.

மொத்தத்தில் பார்க்கும் போது நிராயுதபாணிகளாக நின்ற இரு வயோதிப ஓய்வூதிய காரர்களை, ஆயுதபாணிகளாக வந்தவர்கள் சுட்டுக் கொலைசெய்திருக்கிறுர்கள்.

ராணுவத்தினர் திடீரென நகருக்குள் புகவேண்டிய தேவை என்ன? ஏதாவது நோக்கத்துடன் இவர்கள் சென்றுர்களா? ஏதாவது அசம்பாவிதங்கள் அங்கு இடம் பெற்றதால் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையேற்பட்டதா?

இவைகளைப் பற்றி எந்த விசாரணையும் நடத்த எவருக்கும் அதிகாரமில்லை. பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விவகாரம் இது

அண்மையில் கொள்ளை இடம் பெற்ற பெருமாள் கோவிலைப் புகைப்படமெடுப்பதற்காகவே ராணுவத்தினர் கவச வண்டிகளில் சென்றது உண்மையானுல், இருவர் கொல்லப்பட்டதும் மூவர் படுகாயத்துக்குள்ளாக்கப்பட்டதும் எதற்காக?

ராணுவத்தினர் மீது கைக்குண்டுகள் வீசப்பட்டதற்கான தகவல்கள் எதுவுமில்லை.

ராணுவத்தினர் எவரும் கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரியவில்லை.

ராணுவ வண்டிகள் மீது எந்தத் தாக்குதலும் இடம் பெற்றதற்கான அறிகுறிகள் இல்லை.

இந்த நிலையில் பொதுமக்கள் பல்வேறு தேவைகளுக்காகவும் ஆயிரக்கணக்கில் கூடும் யாழ்ப்பாணத்தின் கேந்திக் நிலையமான நகருக்குள் புகுந்து, ராணுவத்தினர் தமது வேட்கையைத் தீர்த்துக் கட்டக் காரணமாக இருந்தது என்ன?

இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் மனித உரிமைகள் தினக்கூட்டத்தில், கண்காணிப்புக் குழு உறுப்பினரான பேராசிரியர் சிவத்தம்பியும், பேராசிரியர் நேசையாவும் உரையாற்றிக் கொண்டிருந்ததை மறந்து விடமுடியாது.

எனவே, மனித உரிமைகள் தின ஞாபகார்த்தக் கொலைகளாக இதனைக்கருதுவதில் எந்தத் தவறுமிருக்க முடியாது என்பதே எமது கருத்தாகும்.

---

★ மூன்று லட்சம் ரூபா பெறுமதியான வேலை சிரமதானப் பணியினுல் நிறைவேறியது

# மகாதேவா தாம்போதி

# வடக்கிற்கு வரப்பிரசாதம்

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் யாழ். குடாநாட்டுப் பகுதியில் இருந்து பூநகரி பகுதிக்குப் போவதென்றுல் கொழும்புத்துறையில் வள்ளம் எடுத்து பூநகரியில் உள்ள நாகதேவன் துறையில் இறங்கியே பிரயாணம் செய்யலாம். இப்பிரயாணம் காலநிலையைப் பொறுத்து மணித்தியாலக் கணக்கில் இடம்றெும் காலப் போக்கில் மக்கள் கஷ்டங்களை முன்வைத்து கேரதீவுப் பகுதியிலும் சங்குப்பிட்டிப் பகுதியிலும் ஏரியினூடே வீதி அமைத்து பிரயாணத் தூரத்தின் இடைவெளி கணிசமான அளவில் குறைக்கப்பட்டது. இதன் முக்கியத்துவத்தைக் குறித்து இலங்கை சட்டசபையில் தமிழர் பிரதிநிதியாக இருந்த காலஞ்சென்ற திரு. பாலசிங்கம் சபையில் ஆற்றிய உரைகள் மிகவும் பயனுள்ளன.

இதைச் செயல்வடிவில் அன்றைய பொதுவேலை இலாகா பணிப்பாளரும் பொறியியலாளருமாகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு. மகாதேவா 1937ம் ஆண்டு இத் தாம்போதி இணைப்பு வேலையில் மிகவும் சிரத்தைகொண்டு செயலாற்றினுர். அவரின் நினைவாகவே மகாதேவா தாம்போதியென அழைக்கப்படலாயிற்று. தொடர்ந்து சாவகச்சேரியைப் பிரதிநிதிப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் அமரர் குமாரசாமி அவர்களும் இவ்வேலையில் அக்கறையெடுத்து முயற்சியும் மேற்கொண்டார்.

1937ம் ஆண்டு 13,700 அடியாக இருந்த இடைவெளி 1955ம் ஆண்டளவில் 3,300 அடியாகக் குறைக்கப்பட்டது. ஆனுல் அதன்பின் ஒவ்வொரு ஆண்டும் இலங்கைப் பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கும் பொழுது பொதுவேலை இலாகா மதிப்பீட்டில் மகாதேவா தாம்போதிக்கென பத்து ரூபா அடையாள மானியமாக ஒதுக்குவது வழக்கமாய் இருந்தது. இந்த நடவடிக்கை மக்கள் மனதில் தாம்போதி வேலை நிறைவுபெறும் என்ற ஒரு நம்பிக்கையை வளர்த்தது. இந்த எண்ணத்தில் மாதங்களும், வருடங்களும், கழியலாயின.

மகாதேவா தாம்போதி நிரப்பப்பட்டு வீதி அமைத்தால் கடல் நீரின் நீரோட்டம் குறைந்து ஆனையிறவில் உள்ள இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி பாதிக்கப்படும் என முதலில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. நீரின் அளவும் அதன் உவர் தன்மையும் குறைந்துவிடும் என காரணம் காட்டப்பட்டது. ஆனுல் 1975 இல் இலங்கை மத்திய பொறியியல் ஆலோசனைச் சபை கம்பியூட்டர் உதவியோடு ஒரு அளவீடு மேற்கொண்டு அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாதென அறிக்கை சமர்ப்பித்தது. பின்னர் இவ்வழி இணைகப்பட்டால் பாதுகாபபு இல்லை என்ற காரணமும் காட்டப்பட்டது. இத்தடைகள் யாவும் வடபகுதி மக்களுடைய மனதில் பெரும் கவலையைத் தோற்றுவித்தன.

1981 ஆம் ஆண்டு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உத்தியோக பூர்வமான விஜயம் மேற்கொண்ட போது யாழ்ப்பாண செயலகத்தில் ஒரு பெரிய இணைப்புக் கூட்டம் நடந்தது. தமிழர் கூட்டணிச் செயலதிபரும் முன்னுள் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்கட்சித் தலைவருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும், வடபகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய திரு. யோகேந்திரா துரைசுவாமி அவர்களும் ஏகோபித்த குரலில் மகாதேவா தாம்போதி இணைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். பிரதமர் உடனடியாக இவ்வேலையை ஆரம்பிக்கலாம என இணக்கம் தெரிவித்தார். அத்துடன் தாம்போதியையும் சென்று பார்வையிட்டு தமது உத்தரவையும் வழங்கினுர். இவை பொது மக்கள், அதிகாரிகள் மத்தியில் ஒரு பெரும் உற்சாகத்தைத் தோற்றுவித்தது.

நிதி நிலைமையைச் சமாளிக்க வடபகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் முழுமனதோடு, தத்தமக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து நூறு இலட்சம் ரூபாவை ஒதுக்கினுர்கள். பிரதேச அபிவிருத்தி அமைச்சு தன் பொது நிதியிலிருந்து பதினைந்து லட்சம் ரூபாவைஒதுக்கி உதவியது.

3,300 அடி இடைவெளியில் 660 அடி நீளமுள்ள ஒரு பாலமும் மிகுதி 400 திறந்த வாசல்களால் கடல் நீர் தடையின்றி ஓடும் வசதியுள்ள தாம்போதியும் அமைக்க வேண்டியதாயிற்று. கேரதீவுத்துறையின் பக்கமாகத்தான் ஆழம் சராசரி பதினெரு அடி ஆகையால் பாலம் அப்பக்கமாகவே அமைக்கப்படவுள்ளது. சங்குப்பிட்டிப் பக்கமாக, கடல் 4 அடி தொடக்கம் 6 அடி வரை ஆழமாக உள்ளது. இப்பகுதியில் தாம்போதி அமைப்பு வேலை நடைபெற்று முடிவடைந்துள்ளது. இந்த நிர்மாண வேலைகளுக்கு வேண்டிய பாரிய மற்றும் சிறிய அளவிலான கற்களைப் பெறும் பொருட்டு இரு கல் உடைக்கும் குதங்கள், முழங்காவிலிலும், வேம்பிராயிலும் நெடுஞ்சாலை திணைக்களப் பொறுப்பில் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் தேவையான கற்கள் ஒப்பந்தக்காரர்களின் மூலம் பெறப்பட்டது. 2400 தொகைகொண்ட மூன்று அடிவிட்ட 8 அடி நீள கொங்கிறீட் பைப்புகள் கொழும்பு, அநுராதபுரம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டன. மனித சக்தியின் மகிமையை உணர்ந்து தொழிலாளர்களின் முயற்சியினலேயே பாரிய இயந்திரங்கள் இன்றி தாம்போதி நிர்மாண வேலைகள் நடைபெற்றன.

இத் தாம்போதி வேலை 1981 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோது நிறைவேற்றுப் பொறியியலாளராக திரு. சு. இராமகிருஷ்ணன் இவ்வேலைகளைப் பொறுபபேற்றுக் கொண்டார். மக்களின் சக்தியையும் அபிலாசைகளையும் துணையாகக் கொண்டு இப்பாரிய திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்ற சிரமதானப் பணிகள்மூலம் பொதுமக்களையும் பங்குகொள்ள வைக்க விரும்பினுர். இதன் பயனுக பூநகரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடாத்தப்பட்டது. சிரமதானப் பணிகளுக்கு என ஒரு குழு அமைக்கப்பட்டு பொறியியலாளர் திரு. சு. இராமகிருஷ்ணன் தலைவராகவும் பெருந்தெருக்கள் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. சதா இராமகிருஷ்ணன் செயலாளராகவும் பணிபுரிந்தனர். இவர்களுக்குப்பூரண ஒத்துழைப்பை முன்னுள் பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கமும் நெடுஞ்சாலை திணைக்களத்தைச் சேர்ந்த திரு. வி. நாகேஸ்வரனும் நல்கினர்.

**மகாதேவா தாம்போதி 16ம் திகதி திங்கட் கிழமை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

மகாதேவா தாம்போதி வேலைகளைப் பூரணப்படுத்துவதால் பல நன்மைகள் வந்து சேரும் என மக்கள் நெடுங்காலமாக எதிர்பார்த்தனர். இவ்வெதிர்பார்ப்புகள் ஓரளவு நிறைவுபெறும் காலம் இப்பொழுது வந்துவிட்டது. மகாதேவா தாம்போதியும் பாலமும் பூரணப்படுத்தப்பட்டதும் பின்வரும் பயன்களை மக்கள் அடைவார்கள்.

(1) யாழ்ப்பாணத்திலிருந்து பிற இடங்களுக்குச் செல்லும் தூரமும் நேரமும் கணிசமான அளவு குறைக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணத்திலிருந்து மன்னுர் (ஆனையிறவு வவுனியா மூலம்) 142 மைல்; (மகாதேவா தாம்போதி ஊடாக) 70 மைல், (ஆ) யாழ்ப்பாணத்திலிருந்து வவுனிக்குளம் (ஆனையிறவு வவுனியா மூலம்) 72 மைல் (மகாதேவா தாபபோதி ஊடாக) 52 மைல், (இ) யாழ்ப்பாணத்திலிருந்து தென்னியன் குளம் (ஆனையிறவு வவுனியா மூலம்) 80 மைல் (மகாதேவா தாம்போதி ஊடாக 45 மைல் (ஈ) யாழ்ப்பாணத்திலிருந்து முறுகண்டிக்குளம் (ஆனையிறவு வவுனியா மூலம்) 61 மைல் (மகாதேவா தாம்போதி ஊடாக) 47 மைல் (உ) யாழ்ப்பாணத்திலிருந்து அம்பலப் பெருமாள்குளம் (ஆனையிறவு வவுனியா மூலம்) 62 மைல் (மகாதேவா தாம்போதி ஊடாக) 44 மைல் (ஊ) யாழ்ப்பாணத்திலிருந்து வன்னேரிக் குளம் (ஆனையிறவு வவுனியா மூலம்) 64 மைல் (மகாதேவா

—5ம் பக்கம் பார்க்க

# பங்களாதேஷ், உணவுற்பத்தி தன்னிறைவுக்கு

# உறுதியான செயற்பாடு!

(டாக்கா)

**பங்களாதேஷ் தனது உணவுற்பத்தித் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டு விரைவாகச் செயற்பட்டுள்ளது. இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் உணவுற்பத்தியின் தன்னிறைவு அடைந்து விட முடியும் என்று பங்களாதேஷ் வர்த்தகத்துறை அமைச்சர் முலீம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

பங்களாதேஷ் தற்போது வருடத்தில் இருபது இலட்சம் தொன் உணவு தானியங்களை இறக்குமதி செய்து வருகின்றது.

விவசாயிகளுக்கு ஊக்குவிப்புச் சலுகைகளை அளிக்கவும் விவசாய அமைச்சர் முன்வந்துள்ளார்.

இப்போது பங்களாதேஷில் பருத்தி உற்பத்தியைப் பொறுத்த வரை முப்பத்தையாயிரம் மூடைகளே உற்பத்தி செய்யப்படுகின்றன. நாற்பத்தையாயிரம் மூடைகள்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளன.

விவசாயிகளை உற்சாகப்படுத்தி உணவுற்பத்தியை ஊக்குவிக்க அரசு வெகு விரைவான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளும் என்று உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

### அஸாம் தேர்தல்

## பொய்ப் பிரசாரத்தில் சிறுபான்மையோர் ஏமாறக் கூடாதென பிரதமர் எச்சரிக்கை

(கொஹாட்டி)

''அஸாம் தேர்தலின்போது சிறுபான்மையினரை ஏமாற்ற எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரம்மேற்கொள்ளும். ஆனால் மக்கள் அதில் ஏமாந்துவிடக் கூடாது'' என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி அஸாமில் தேர்தல் பிரசார வேளை எச்சரித்தார்.

''அஸாம் பிரச்சினை தொடர்பான உடன்பாடு சிறுபான்மையினருக்கு நன்மையளிக்கும். ஒரு பிரிவுக்கோ, சமூகத்திற்கோ அது ஊறு விளைவிக்கப் போவதில்லை. மாறாக நன்மையே தரும்'' என்றார் பிரதமர்.

''அஸாமை நாட்டிலிருந்து தனியாகப் பிரிக்க நடத்தப்படும் சதித்திட்டம் முறியடிக்கப்பட வேண்டும்'' என்றும் அவர் வற்புறுத்தினார்.



அடுத்த திங்கட்கிழமை இங்கு தேர்தல் நடைபெறுகின்றது.

### தமிழக வெள்ள நிவாரணம்

## மேலும் 10 கோடி ரூபா செலவிட முதல்வர் உத்தரவு

(சென்னை)

வெள்ள நிவாரண நிதிக்கு மேலும் பத்துக் கோடி ரூபாவை ஒதுக்குமாறு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே வெள்ள நிவாரணத்திற்குப் பதினறு இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## தலைமையக பிரச்சினையும் முதல்வரால் சுமுகத் தீர்வு

(சென்னை)

**ஆசிரியர் கிளர்ச்சியை முன்வைத்து, திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான ஐந்து தொழிற்சங்கங்கள் நேற்று அரசு அலுவலகங்கள் முன் நடத்தத் திட்டமிட்டிருந்த மறியல் போராட்டம் ஆசிரியர் பிரச்சினை முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் நேரடித் தலையீட்டினால் சுமுகமாகத் தீர்க்கப்பட்டதையடுத்து கைவிடப்பட்டுள்ளன.**

ஆசிரியருடனான உடன்பாட்டைக் காலதாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும், கைதானோரை உடனடியாக விடுதலைசெய்யவேண்டும், பழிவாங்கல் நடவடிக்கை எதுவும் இருக்கக்கூடாது என்றும் எதிர்க்கட்சிக் கூட்டணிகள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

ஒருமாதத்திற்கு மேலாகக் நடைபெற்றஆசிரியர் கிளர்ச்சியையும் மீனவர் பிரச்சனையையும் எதிர்க்கட்சிகள் முன்வைத்து சில தினங்களுக்கு முன் பொது வேலை நிறுத்தம் மேற்கொண்டன என்பதும் ஆனால் வெற்றியளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இதேவேளை தலைமைச் செயலக ஊழியர்களில் ஒரு பகுதியினர் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தையும் முதலமைச்சர், தலைமைச் செயலர் திரு. அன்ரனி ஊடாக சுமுகமாகத் தீர்த்துவைத்துள்ளார் என நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.

ஊழியர்களின் மூன்று முக்கிய கோரிக்கைகளை அரசு ஏற்க ஒப்புதல் அளித்துள்ளதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மீனவர் பிரச்சினையிலும் சுமுகத் தீர்வொன்றினைக் காண முதலமைச்சர் சகல முயற்சிகளும் மேற்கொள்வார் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## கனடா விபத்து: கறுப்பு பெட்டி மீட்பு; ஆயினும்....

(ஒட்டாவா)

கனடாவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த விமான விபத்தில் சம்பந்தப்பட்ட விமானத்திலிருந்த கறுப்புப் பெட்டி கண்டு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இவ்விபத்தில் 258 அமெரிக்க சமாதானப் படை வீரர் கொல்லப்பட்டிருந்தனர்.

கறுப்புப் பெட்டி கண்டு பிடிக்கப்பட்டுள்ள போதிலும் அதனால் பயனேதும் கிடைக்கப் போவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அது மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதே இதற்குக் காரணம் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### பிந்திய செய்தி

(வாஷிங்டன்)

கனடாவில் ஏற்பட்ட விமான விபத்திற்கு நாசவேலை காரணமல்ல என்று அமெரிக்க, கனடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓர் பூர்வாங்க விசாரணையின் பின் இது தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்ப்பட்டது.

இதுவரை சுமார் நூறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

### ஆஸி, பயணம்

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தைச் சேர்ந்த உடுப்பிட்டு தேவாலய சேகரக்குழு அருட்திரு. எஸ். மனோபவன் அடிகளார் இரண்டுவருட விடு முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார்.

### உங்களுடையதா?

பெரியகல்லாறு கனகரெத்தினம் இராசரத்தினம் என்பவரது பொருள் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

மகாதேவா....

—4ம் பக்கத் தொடர்

தாம்போதி ஊடாக) 33 மைல் (எ) யாழ்ப்பாணத்திலிருந்து அக்கராயன்குளம் (ஆனையிறவு வவுனியா மூலம்) 59 மைல் (மகாதேவா தாம்போதி ஊடாக) 40 மைல் (ஏ) யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி (ஆனையிறவு வவுனியா மூலம்) 55 மைல்) மகாதேவா தாம்போதி ஊடாக) 21 மைல்.

இவை யாவும் குடியேற்றத் திட்டங்கள் அமைந்த விவசாயக் கிராமங்கள் என்பது குறிப்பிடத்தககது.

(2) போக்குவரத்து சீராக அமையும் போது பின்வரும் விவசாய நிலைக்களங்கள் அபிவிருத்தியடையும் பெருவாய்ப்பு உண்டு.

25,000 ஏக்கர் நெல் வயல்கள் 7,500 ஏக்கர் உப உணவு உற்பத்தி நிலங்கள், 9,000ஏக்கர் தென்னந்தோட்டங்கள்.

ஒரு பின்தங்கிய பகுதியான பூநகரியில், முழங்காவில் வளர்ந்துவரும் குடியேற்றக் கிராமமாகும். இங்கு குழாய்க் கிணறு அமைத்து அந்நகரின் மூலம் உப உணவுப் பொருட்கள் மிகப்பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு மிக வெற்றிகரமான முறையில் இத்திட்டம் செயல்படுகிறது.

இங்குள்ள உற்பத்திப் பொருட்கள் நூற்றுக்குத் 90 சதவீதம் யாழ் நகரச் சந்தையையே நாடிவருகின்றன. எதிர்காலத்தில் ஓர் இடையூறும் இன்றி விவசாயிகள் விளைவின் முழுப் பயனையும் அடையும் பேறினைப் பெறுவர் என்பது திண்ணம்.

கவுதாரிமுனை, வெட்டுக்காடு, கிராஞ்சி ஆகிய இடங்களில் பெருமளவு தென்னைச் செய்கை உண்டு. அபிவிருத்தி பெரிய அளவில் அடைய வசதியுண்டு. தேங்காய், கிடுகு, மட்டை போன்ற தெங்குப் பொருள்கள் யாவும் இன்று வரை சங்குபிட்டியில் இருந்து பெருவள்ளங்களில் கொழும்புத்துறை ஊடாக யாழ்ப்பாணத்தை அடைகின்றன. பாதை சீராகுமேயானால் சிரமம் தானாகவே நீங்கும்.

மேலும் யாழ் குடாநாட்டில் இப்பொழுது மூலை முடுக்கெல்லாம் கல் வீடுகளாக உருவெடுக்கின்றன. வீடு கட்டப் பயன்படுத்தப்படும் வெள்ளை மணல் தற்சமயம் குடா நாட்டுப் பகுதியில் எடுப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கவுதாரிமுனையில் ஒரே சீராக நாம் கண்டு வியக்கத்தக்க அளவு மண் மலைகளா பரந்து காணப்படுகிறது.

மகாதேவா தாம்போதியும் பாலமும் பூரணப்படுத்தப்பட்டதும் இம்மண்ணை பிற இடங்களுக்கு எடுத்துச் செல்ல வாய்ப்புண்டு. அத்துடன் காணிச் சொந்தக்காரர்களும் நல்ல வருமானத்தைத் தேடிக் கொள்வார்கள்.

யாழ். குடாநாட்டில் நாளுக்குநாள் மக்கள் தொகை கூடி இடப்பிரச்சினை அதிகமாகிறது. மக்களை பூநகரி, முழங்காவில், கிராஞ்சி மற்றும் பகுதிகளுக்கு குடாநாட்டைவிட்டு வெளியேறி இப்பகுதிகளில் குடியேறும்படி நிர்ப்பந்திக்க இயலாதிருந்தது. காணிப் பங்கு செய்தாலும் போக்குவரத்துச் சிரமங்களை எண்ணி அவற்றைக் கைவிட்டு விடுகின்றனர். ஆனால் நேர்சீரான போக்குவரத்துப்பாதைஅமைந்ததும் குடியேற்றத்திட்டங்களில் மக்களின் அக்கறையும் ஆர்வமும் உண்டாகும்.

முதற்கட்டமான மகாதேவா தாம்போதி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதால் இப்பாதையைப் பூரணப்படுத்த இரண்டாம் கட்டமான 660அடி நீளப் பாலத்தைக் கட்டி முடிக்க வேண்டும். இவ்வேலைக்கென ஒன்றரைக் கோடி ரூபா தேவைப்படலாம்.

1983 ஆம் ஆண்டு நெடுஞ்சாலை அமைச்சு இப்பாரிய வேலைக்கென முதற்கட்டமாக 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. இப்பணம் தற்பொழுது வைப்புப்பணமாக உள்ளது. இப்பணத்தைக்கொண்டு பால வேலைகளை உடன் ஆரம்பிக்கலாம். இவ்வேலை மத்திய அரசாங்கத்தின் நிதியுடன், மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள நிர்மாண கூட்டுத்தாபனத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு திட்டமாகும்.

நிர்மாண வேலைகளுக்கும் குழுவின் முயற்சிகளுக்கும் பக்கபலமாகவும் துணையாகவும் காலஞ்சென்ற நெடுஞ்சாலை திணைக்கள பிரதம பொறியியலாளர் திரு. எஸ். கணேசரெட்டினம், யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன், பிரதம பொறியியலாளர்களான திரு. சு. பாலேந்திரா, திரு. எஸ். எம். வி திசநாயகம் ஆகியோர் இருந்தனர்.

சிரமதானப் பணிகளுக்கு பூநகரிப் பகுதி உழவு இயந்திரங்களைத் தந்து உதவியும் மற்றும் பொதுமக்கள் பங்குபற்றியும் ஆரம்பித்து வைத்தனர். இதைத் தொடர்ந்து சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும் சிரமதானப்பணி எழுபது நாட்களுக்கு நடைபெற்றது. மக்களிடமிருந்து ஆதரவும், பணியில் வெற்றியும்கண்டு நடைமுறைப்படுத்தி சிரமதானம் என்ற சொல்லுக்கே ஒரு புதுமெருகூட்டினர். எல்லோருடைய விடா முயற்சியாலும், ஒத்துழைப்பாலும் மகாதேவா தாம்போதி வேலை சிறப்பாக நடைபெற்றது.

(மிகுதி திங்கள் வெளிவரும்)

### முயற்சி பலிதம்

(வயாவிளான்)

அச்சுவேலி உப- அபிவிருத்திச் சபை அலுவலகத்துக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமின் இணைப்பினைத் தடுக்கும் முயற்சியின் முதற்கட்டமாக கண்காணிப்புக் குழு ஒன்று மாவட்ட அபிவிருத்திச் சபையின் அச்சுவேலி உப - அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் முயற்சியால் அமைக்கப்பட்டுள்ளது.


## சேவை

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் என்பன உடன் திருத்திக் கொடுக்கப்படும்.

அன்ரனு பொருத்துதல், வீட்டு மின்சார வேலை என்பனவும் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

**Jaffna Technical Institute,**

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.

பிரதான வீதி, (சேச் அருகாமை) பண்டத்தரிப்பு.

ஈழமுரசு

## தடைச்சட்டத்தால் பாதிப்புற்ற மீனவர்களுக்கு நிறுவன உதவி

(வேலணை)

கடல் வலய தடைச்சட்டத்தினால் பாதிக்கப்பட்ட வேலணை கெட்டில், வேலணைத்துறையூர், செட்டிபுலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவ கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார், குழந்தைகள் ஆகியோருக்கு வெளிநாட்டு நன்கொடை நிறுவனங்களாகிய போரூட், றெட்பானா, குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் ஐக்கிய ராச்சியம், சர்வோதயம் ஆகிய நிறுவனங்கள் போஷாக்கு நிறைந்த பால் சோயா உணவுகள் இன்னும் பல உப உணவுகள் வழங்கி வருகின்றன.

கடற்படைக்கு மேலும் நிலம் ஒதுக்கீடு:

# ராமேஸ்வரம் பகுதியில் ஔவையார் ரோந்து

# கடற்பகுதி ஊடுருவலைத் தடுக்க நடவடிக்கை!

(சென்னை)

இந்திய கரையோர காவற் படை புதிதாக வாங்கிய ஔவையார் என்ற கப்பலும் ராமேஸ்வரம் கடலில் இப்பொழுது ரோந்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கடற்பகுதியில் ஊடுருவலைத் தடுப்பதற்கும், மீனவர்களைப் பாதுகாப்பதற்குமாகவே இக்கப்பல் இங்கு ரோந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே வேறு மூன்று கப்பல்கள் இங்கு ரோந்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் ராமநாதபுர மாவட்டத்திலுள்ள உச்சிப்புளி என்ற இடத்தில் கடற்படை விமான தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. கடல் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இது மேலும் உதவியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இதற்காக ராமநாதபுரம் மாவட்டத்தில் தொன்னூற்று நான்கு ஹெக்டர் ஏக்கா நிலம் கடற்படைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## தொலை தொடர்பு இலாகா கம்பனியாக மாற்றப்படும்

(கொழும்பு)

தொலை தொடர்பு திணைக்களத்தை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட கம்பனியாக மாற்றியமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் கூறினார்.

இத்துணைக்களத்தின் ஊழியர்கள் எவரும் கட்டாயமாக வேலையிலிருந்து நீங்க வேண்டுமென்று கேட்கப்படமாட்டார்கள் எனவும், அவர்கள் விருப்பினால் தாமாகவே வேலையிலிருந்து நீங்கிக் கொள்ளலாம் எனவும் அமைச்சர் கூறினார்.

தொலை தொடர்பு திணைக்களத்தின் சேவைகளை முன்னேற்றுவதற்காகவே இவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அகதிகளுக்கு உணவு, உடை அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலயப் பரிபாலன சபையினர் ஆலய முன்றலில் வைத்து, திருமலை, வவுனியா மாவட்டங்களில் இருந்து அகதிகளாக வந்து, கோப்பாய் உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பதினைந்து குடும்பங்களுக்கு அரிசி, ஆடைகள், தேங்காய் என்பன வழங்கிப் பங்கிட்டளித்தனர்.

இவ்வைபவ பங்குத் தந்தை குலம் அடிகளாரும், செயலாளர் திருமதி செல்வமலர் சிவானந்தராஜாவும், அகதிகள் முகாம் ஒருங்கிணைப்பு மாநாட்டு விசேட குழு உறுப்பினர் திரு ரமேஷ் குமார் முதலானோரும் சமுகமளித்திருந்தனர்.

இரண்டாம் கட்டப் பொருட்கள் தைப்பொங்கலை முன்னிட்டு அதாம் திகதி வழங்கப்படுமென்று சபைத் தலைவர் திரு. பே. ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

## ஆயிரம் ரூபா ரொக்கப் பரிசு

(காரைநகர்)

தற்போது நடைபெற்று வரும் க. பொ. த. ப. (சாதாரண) தரப் பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி (8 டி) பெறும் காரை நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணவருக்கு ரூபா ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்குவதற்கு காரைநகர் வாரிவளவு நலனியக்கச் சபை தீர்மானித்துள்ளது. இத்தகவலை நலனியக்கச் சபையின் செயலாளர் திரு. ச. பத்மநாதன் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

## பரீட்சையில் சித்தி

(அரியாலை)

1985 க.பொ.த.(உயர்தரம்) பரீட்சைக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றிய நாற்பது மாணவர்களில் பதினைந்பேர் நான்கு பாடங்களிலும், இருவர் மூன்று பாடங்களிலும் சித்தி அடைந்துள்ளனர். இப்பதினைந்து மாணவர்களில் கணிதப் பிரிவில் இருவர் விஞ்ஞானப் பிரிவில் இருவர், வர்த்தகப்பிரிவில் பத்துப்பேர், கலைப் பிரிவில் இருவரும் சித்தி அடைந்துள்ளனர்.

## சமிக்ஞை கருவிகள் செயலிழப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் புகையிரத நிலையத்திலுள்ள சமிக்ஞை கருவிகளுக்குப் பொருத்தப்பட்டிருந்த இரும்புச் சங்கிலிகள் திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந் நிலையத்திலுள்ள நான்கு சமிக்ஞை கருவிகளும் செயற்பட முடியாதுள்ளது. இச்சங்கிலிகள் இதற்கு முன்னரும் திருடப்பட்டு பின் அண்மையில் தான் மீளப் பொருத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## வாகன விபத்தில் இளம்பெண் மரணம்; தாய் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். நகரில் இடம் பெற்ற வாகன விபத்தில் சங்குவேலியைச் சேர்ந்த விமலா (18) என்ற இளம் பெண் மரணமானார்,

இவர் தமது தாயாருடன் மின்சாரநிலைய வீதியால் வந்த போது வேகமாக வந்த மினி வானொன்று இவர்கள் இருவரையும் மோதிவிட்டு சென்றதாம். இருவரும் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாயினும் மகள் இறந்து விட்டார்,

தாயாரான சிவலட்சுமி (42) படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஜமே அதே இஸ்லாம் நூலகம் தீமூட்டி எரிக்கப்பட்டது

(வண்ணார்பண்ணை)

யாழ். முஸ்லிம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாத சிலரால் 'ஜமா அத்தே இஸ்லாம்' அமைப்பின் கீழ் இயங்கும் நூல் நிலையம் முற்றாக எரிக்கப்பட்டது.

இந் நூல் நிலையத்தின் பல இலட்ச ரூபா பெறுமதியான புத்தகங்களும் எரிந்து சாம்பரானது. எரிக்கப்பட்ட யாழ். பொதுசன நூல் நிலையத்திற்கு இவ் அமைப்பு பல இலட்சரூபா பெறுமதியான புத்தகங்களை முன்னர் அன்பளிப்புச் செய்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இவ் அமைப்பின் தலைவரின் வீட்டிலுள்ள பலவாயிரம் ரூபா பெறுமதியான கண்ணாடிகளும் காட்சி பொருள்களும் அலுமாரிகளையும் உடைத்து நொருக்கப்பட்டுள்ளது.

பின்னர் இஸ்லாமிய பாடசாலையொன்றின் தலைமை ஆசிரியர் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற சிலர் அங்கும் பல பொருட்களை உடைத்த பின்னர் அங்கிருந்து முப்பத்து நாலாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் உடு புடவைகளையும் எடுத்துச் சென்றுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

ஜமா அதே இஸ்லாம் ஆதரவாளர்கள் பலரின் வீட்டிற்குள் புகுந்து அவர்களுக்கு கொலைப் பயமுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

முஸ்லிம் பகுதியில் ஒரு நூல் நிலையம் திறப்பதற்கான சர்ச்சையே இச்சம்பவங்களுக்குக் காரணமென்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதியிடம் கோரிக்கை

## கிழக்கில் கைதான துன்னாலை வாசியின் நிலையறிய உதவுக

(புலோலி)

களுவாஞ்சிக்குடி பட்டிருப்பு நீர்ப்பாசன அலுவலக வேலை மேற்பார்வையாளராகக் கடமையாற்றி 25-11-85 அன்று ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட எனது கணவர் பற்றிய விபரங்களை அறிய உதவி புரியுமாறு கைதுசெய்யப்பட்டவரின் மனைவி திருமதி. எஸ். விஜயலட்சுமி ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவைக் கேட்டுள்ளார்.

துன்னாலையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய திரு. வி. சிதம்பரப்பிள்ளை என்ற நீர்ப்பாசன அலுவலக வேலை மேற்பார்வையாளர் கடந்த 25-11-85 அன்று புல்லுமலையில் வைத்து ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டாராம். அதன் பின்னர் அவர் பற்றிய தகவல்கள் எதையும் பெற்றுக் கொள்ள முடியவில்லையாம். இதனைத் தொடர்ந்தே அவரது மனைவி ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவை மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மட்டக்களப்பு இராணுவ இணைப்பு அதிகாரி, யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினர் பேராசிரியர் கே. சிவத்தம்பி, மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திரு. வி. இரகுநாதன், பட்டிருப்பு நீர்ப்பாசன பொறியியலாளர் திரு, கே. குணநாயகம் ஆகியோரும் இது சம்பந்தமாக மேலிடங்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மும்மொழி கணிக்கும் கம்பியூட்டர்

(சென்னை)

சென்னை ஐ. ஐ ரி. தமிழ், ஆங்கில, ஹிந்தி ஆகிய மும்மொழிகளையும் கணிக்கும் புதிய கம்பியூட்டர் கருவி ஒன்றை வடிவமைத்திருப்பதாக மத்திய மின்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தெரிவித்துள்ளார். இது தொலைக்காட்சிப் படங்களின் உரையாடல் மொழிமாற்றங்களை மொழிபெயர்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழர்கள்....

யாக வாழலாம்; அஹிம்சைப் போராட்டம் நடத்தலாம்; ஆயுதம் ஏந்தலாம் என்பதெல்லாம் அடிமையாக எந்த இனமும் வாழ விரும்பாது. அஹிம்சை வழி உதவவில்லை'' என்றும் தெரிவித்தார்.

இன்று தீவிரவாதிகள் என்று சொல்லப்படுபவர்களில் பலரும் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களே என்றும் அமைச்சர் தமது பேச்சில் சுட்டிக்காட்டினார்.

### கட்டைபறிச்சான்....

சியளித்த பிரஜைகள் குழுப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

திருமலையைச் சேர்ந்த பெண் சட்டத்தரணியொருவர் சாட்சியங்களை ஒழுங்குபடுத்துவதில் உதவினார். டாக்டர் ஒருவரும் சாட்சியமளித்தார்.

ஆலங்கேணியில் ஏழு பேர் காணாமல் போனது பற்றியும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

சம்பூரில் நான்கு பெண்கள் கற்பழிக்கப்பட்டது, தம்பலகாமத்தில் சிலர் உயிருடன் எரிக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் நடைபெறும்.

### அரசாங்கம்...

சாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட தாக்குதல்திட்டம் சம்பந்தமான செய்தி நேற்றைய 'ஈழமுரசு'வில் முதலாம் பக்கத்தில் வெளியானது.

### இரு வயோதிபர்கள்....

மரண விசாரணைகளை நடத்தினர்.

டாக்டர் பரிமேலழகர் பிரேத பரிசோதனைகளை நடத்தினர்கள்.

### யாழ்நகரில்....

யாவாகளும் நோயாளர்களும் பெரும் இன்னலுற்றனர்.

பஸ் நிலையம்: குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற பகுதியில் அதிகமாகக் கேட்டதால் பிரயாணிகள் குறைவாகவே காணப்பட்டனர். எனினும் பஸ்களும், மினிவான்களும் முற்றாக நிறுத்தப்படவில்லை. இதனால் பயணிகள் பாதிக்கப்படவில்லை.

வங்கிகள்: ஊழியர் வரவும் குறைவாக காணப்பட்டது டன, வாடிக்கையாளர்களும் குறைந்தே காணப்பட்டனர். இதனால் வங்கிகள் கலகலப்பாக இருக்கவில்லை.

சந்தைகள்: அதிகாலையே பின் விளைவை எதிர்நோக்கி வாடிக்கையாளர்கள் தமக்குத் தேவையானவற்றை விரைவாகப் பெற்றுச் சென்றனர். நண்பகலுக்குப் பின்னர் வெறிச்சோடிக் காணப்பட்டன.

முக்கிய வீதிகள்: வாகனங்கள் ஒரு ஆங்காங்கே காணப்பட்டன. சைக்கிளில் சென்றவர்கள் அதிகம். மக்கள் நடமாட்டம் குறைவு. சில இடங்களில் கறுப்பு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 14-12-1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336